தமிழ்ப் பல்கலைக் கழகச்
செய்தி மலர்
மலர் 5 திருவள்ளுவராண்டு—2017 புரட்டாசி 28 14.10.1986 இதழ் 7

நுண்கணிப்பொறிகளும் வழியமைப்பு மொழிகளும்

"வழக்குகளைப் பற்றிய செய்திகள், விதிமுறைகள், ஒரு குறிப்பிட்ட வழக்கிற்கு முன்னர் நீதிமன்றங்களில் வழங்கப்பட்ட தீர்ப்புகள் ஆகிய செய்திகளைக் கணிப்பொறியில் பதிவு செய்து பின்னர் அவைகளைப் பயன்படுத்திக்கொள்ளும் வழிகளைக் கணிப்பொறி அறிஞர்கள் உருவாக்கித்தர முன்வருமாறு வேண்டுகிறேன்"

என்று மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி திரு இரா.இராசகோபாலன் அவர்கள் தமிழ்ப் பல்கலைக் கழகக் கணிப்பு மையத்தில் புதுதில்லி பல்கலைக் கழக நல்கையுடன் நடைபெறும் 'நுண்கணிப் பொறிகளும் வழியமைப்பு மொழிகளும்' என்ற பயிற்சி வகுப்பின் தொடக்க விழாவில் தொடக்க உரையாற்றுகையில் கேட்டுக்கொண்டார்.

இவ்விழா 01.10.'86 அன்று காலை 9.30 மணியளவில் தமிழ்ப் பல்கலைக் கழகக் கருத்தரங்க அறையில் நடைபெற்றது. இவ்விழாவிற்குத் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு இர. ஆலாலசுந்தரம் அவர்கள் தலைமையேற்றார்கள். அறிவியல் புலத்தலைவர் ஐ.சாதிக் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள். விழாவின் தொடக்கத்தில் இப்பயிற்சி வகுப்பின் இயக்குநரும், கணிப்பு மையத்தின் பேராசிரியருமான திரு கா.செ.செல்லமுத்து அவர்கள் வரவேற்புரையில் இப்பயிற்சி வகுப்பின் நோக்கத்தையும் அதன் அமைப்பையும் இப்பயிற்சி வகுப்பிற்குப் பயிற்சியாளர்களைத் தெரிவு செய்த முறைகளையும் தெளிவுபடுத்தினார்கள்.

இப்பயிற்சி வகுப்பில் 14 மேல்நிலைப்பள்ளி ஆசிரியர்களும் 22 கல்லூரி ஆசிரியர்களும் பல பொறியியல் பட்டதாரிகளும் மற்றும் முனைவர் பட்ட ஆய்வாளர்களும் பங்கேற்கின்றனர். இப்பயிற்சி வகுப்பு 07.11.'86 அன்று நிறைவு பெறும்.

—கணிப்பு மையம்

கல்லூரி ஆசிரியர்களுக்கான நாடகப் பயிற்சிப் பட்டறை

தமிழ்ப் பல்கலைக் கழக நாடகத்துறை பல்கலைக் கழக நல்கையுடன் கல்லூரி ஆசிரியர்களுக்கான ஒரு மாத கால நாடகப் பயிற்சிப் பட்டறையை 22.09.'86 முதல் தொடங்கி நடத்தி வருகிறது

இதன் தொடக்கவிழா 22.09.'86 அன்று காலை 10 மணியில் பல்கலைக் கழகப் புதிய வளாகத்தில் உள்ள ஆடல்வல்லான் திறந்த வெளிக் கலை அரங்கில் தமிழ்ப் பல்கலைக் கழகப் பதிவாளர் திரு இர.ஆலாலசுந்தரம் அவர்கள் தலைமையில் நிகழ்ந்தது. தலைமையுரையில்,

"பண்டைத் தமிழ்நூல்களில் முத்தமிழ் பற்றி, குறிப்பாக நாடகத் தமிழ்பற்றிக் குறிப்பிடப்பட்டுள்ளது.என்றாலும், பண்டை நாடகத்தமிழ் இலக்கியம் எதுவும் நமக்குக் கிடைத்திலது. தமிழ் நாடக இலக்கியத்தின் தொன்மை பற்றியும் வரலாறு பற்றியும் ஆய்ந்தறிவது நாடகத் துறையின் கடமையாகும்"—என்றார்.

புலத்தலைவர் பேரா. து.ஆ.தனபாண்டியன் அவர்கள் தொடக்க உரையாற்ற நாடக ஆசிரியரும் இயக்குநருமாகிய திரு கோமல் சுவாமிநாதன் அவர்கள் சிறப்புரையாற்றினார்கள்.

தமிழ்நாட்டின் பல கல்லூரிகளிலிருந்து 25 கல்லூரி ஆசிரியர்கள் பங்கு பெற்றுப் பயிற்சி பெறுகின்றனர். 19.10.'86—இல் இப்பயிற்சி நிறைவு பெறும்.

நடகத்துறைப் பேராசிரியர் சே.இராமானுசம் அவர்கள் தொடக்க விழாவில் வரவேற்பு உரை நிகழ்த்த நாடகத் துறை இணைப் பேராசிரியர் முனைவர் மு.இராமசாமி அவர்கள் நன்றி கூற விழா இனிதாக நிறைவேறிற்று.

சேக்கிழார் தந்த சொல்

வானில் அருள் ஒலியைத் தருவது 'அசரீரி' எனப்பட்டது. 'உடல் இல்லாதது' — என்பது இதன் பொருள். சேக்கிழார் இதற்கு 'வான்நிழல்—வானிழல்' — என்னும் சொல்லைப் படைத்தார்.

"வெருளில் மெய்ம்மொழி வானிழல் கூறிய"
—பெரிய புராணம்—பாயிரம்:9—3

இலங்கையிலிருந்து கண்ணகிக்கு மாணிக்கம்

15—ஆம் நூற்றாண்டில் இலங்கை யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த வையாபுரி என்னும் புலவர் 'இலங்கை மண்டலக் காதை' என்னும் செய்யுள் நூலை எழுதினார். அது 'வையாபாடல்' என வழங்கப்படுகின்றது. அதில் கண்ணகி தொடர்பாகப் பின்வரும் கருத்து காணப்படுகின்றது.

'கலியுக ஆண்டு 3392—இல், அஃதாவது கிபி.192—இல் மதுரையை ஆண்ட மன்னன் ஒருவன் விற்கரச் சோழன் என்னும் மன்னனைப் பணிந்து பெருவணிகச் சீமான்கள் வாழ்ந்த பூம்புகாரில் பிறந்த கண்ணகிக்காக 'அரவுமணி'— நாகரத்தனம்— என்னும் மாணிக்க மணியை இலங்கை யிலிருந்து பெற்றுத் தருமாறு வேண்டினான்'. இக்கருத்தைத் தரும் பாடல்:

அற்புத மாகும் கலியுக மூவா
யிரத்துமுந் நூறுடன் தொண்ணூ
றுற்றிடும் இரண்டா மாண்டினில் அரசன்
உயர்மது ராபுரி நாடன்,
விற்கரச் சோழன் றனையடி வணங்கி
விறல்வணி கேசர் மாநகர்
பெற்றிடு புதல்வி கண்ணகை தனக்குப்
பேரர வின்மணி வேண்ட

—வையாபாடல், செய்யுள் 52

விற்கரச் சோழனும் தன் கப்பற்படைத்தலைவனைக் கொண்டு அம்மணிதன்னைப் பெற்றுத் தந்தான் என்று தொடரும் செய்யுள் அறிவிக்கிறது.

—கோவை இளஞ்சேரன்

திருக்குறள் வீட்டுப்பால் ஏடு

பேராசிரியர் எஸ்.வையாபுரிப் பிள்ளை அவர்கள் ஒருமுறை பாண்டிச்சேரியில் உள்ள ஆனந்தரங்கம்பிள்ளையவர்களின் மாளிகைக்குச் சென்று அங்கிருந்து பல தமிழ் ஏடுகளைப் பெற்றுச் சென்றுள்ளார். தாம் பெற்றுச் சென்ற ஏடுகளின் பட்டியல் ஒன்றை எழுதி அதில் பேராசிரியரவர்கள் தமது கைச்சான்றையும் இட்டுள்ளார். அந்தப் பட்டிய லில் 'திருக்குறள்—வீட்டுப்பால்' என்ற ஏட்டின் பெயரும் காணப்படுகின்றது. பேராசிரியரவர்களின் நூலகத்தில் இருந்த நூல்கள் எல்லாம் கல்கத்தா தேசிய நூலகத்தில் உள்ளன. அவற்றுள் இந்தத் 'திருக்குறள்—வீட்டுப்பால்' ஏடும் இருக்கலாம்.

—ஆ.காமாட்சி நாதன்
மொழியியல் துறை
அண்ணாமலைப் பல்கலைக் கழகம்

கரப்பான் பூச்சியைக் கொல்ல . . .

கரப்பான், சிள்வண்டுப் பூச்சிகளின் தொல்லை தாங்கமுடியவில்லையா? 0.5 கிராம் சோப்புத் துண்டை 100 மி. நீரில் கலந்து, இந்தப் பூச்சிகளின் மீது தெளித்தால் அவை இறந்துவிடும். பெரிய கரப்பான் பூச்சிகளைக் கொல்ல 2 கிராம் சோப்புத் துண்டை 10 மி. நீரில் கலந்து தெளிக்க வேண்டும். இந்தப் பூச்சிகளின் மூச்சு மண்டலத்தில் இந்தச் சோப்புத் தண்ணீர் ஒரு விதச் சோப்புப் படலத்தை (soap-film) உண்டுபண்ணுவதால், அவை மூச்சுத் திணறி இறந்து விடுகின்றன. நமது வீடுகளில் இந்தப் பூச்சிகள் வசிக்கும் துளைகளில் இந்த நீரை ஊற்றினாலும் அவற்றின் பிறப்பு பாதிக்கப்படும் என்றும் ஆய்ந்து அறிந்துள்ளனர், கோழிக் கோடு, நீர்வளத்துறையைச் சார்ந்த அறிவியல் அறிஞர்கள்.

—அறிவியல் பண்ணை

சைவ சித்தாந்த மேற்படிப்புப் பட்ட வகுப்பு

மதுரை காமராசர் பல்கலைக் கழகச் சைவ சித்தாந்தத் தத்துவத்துறை இவ்வாண்டு (1986—'87) முதல் சைவ சித்தாந்தத்தில் எம்ஃபில் (M.Phil.) பட்ட வகுப்புகளைத் தொடங்குகிறது. தமிழ் நாட்டிலேயே — இந்திய நாட்டிலேயே முதன்முறையாக இப்பட்ட வகுப்பு தொடங்கப் பெறுகிறது. சைவசித்தாந்தப் பயிற்சி வரலாற்றில் இது குறிப்பிடத்தக்க நிகழ்ச்சியாகும்.

தத்துவத்தில் முதுகலைப் பட்டம் பெற்றோரும், சைவ சித்தாந்தத்தை விருப்பப் பாடமாக எடுத்துத் தமிழில், முதுகலைப் பட்டம் பெற்றோரும் இவ்வகுப்பில் சேர்வதற்குத் தகுதியுடையோர் ஆவர். நிரப்பப் பெற்ற வேண்டுகோள் தாள்கள் அக்டோபர் 15—ஆம் நாளுக்குள் அனுப்பப் பெறல் வேண்டும்.

சைவ சித்தாந்தத் துறை,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம்.

மொழியியற் பயிற்சிப் பள்ளி

பல்கலைக்கழக நல்கைக் குழுவின் உதவியுடன் மதுரை காமராசர் பல்கலைக்கழக மொழியியல் துறையில் அகராதி யியல் பற்றிய அனைத்திந்திய அளவிலான குறுகிய காலப் பயிற்சிப் பள்ளி ஒன்று 1986—ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 3 முதல் 23 வரை நடைபெறவிருக்கிறது. ஏறத்தாழ முப்பதுபேர் இப்பயிற்சியில் பங்கு பெறுவர். பத்திற்கும் மேற்பட்ட அகராதிக்கலை வல்லுநர்கள் வகுப்புக்களை நடத்திப் பயிற்சியளிப்பார்கள்.

—மோ.இசரயேல்
குறுகிய கால அகராதிக்கலைப்
பயிற்சிப் பள்ளி இயக்குநர்

தஞ்சாவூர்—பெயர்க் காரணம்

'ஆவூர்' என்ற ஊர்ப்பெயர் சங்க இலக்கியங் களில் குறிக்கப்பெற்றுள்ளது. இன்றைய தஞ்சாவூரைச் சுற்றிப் பல ஆவூர்கள் இன்றும் உள்ளன. ஆவூர் எனத் தனித்து உள்ளது போல் தண் செய்+ஆவூர் —>தஞ்செய்+ ஆவூர —> தஞ்சை ஆவூர்—>தஞ்சாவூர் என அடைமொழி பெற்றுத் தஞ்சாவூர் என விளங்குகிறது.

—கோ.தெய்வநாயகம்
சிறப்புத்துறை

சுவடிகள் அன்பளிப்பு

திருச்சி பாரத வங்கியில் மேலாளராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திரு மு.சண்முக சுந்தரம் அவர்கள் பின்வரும் பனையோலைச் சுவடிகளைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்கு முனைவர் கு.சீனிவாசன் வாயிலாக வழங்கியுள்ளார்.

1. மருத்துவம் (இலேகியம், பஃச்பம், செந்தூரம், மாத்திரை, சுண்ணம், கலிக்கம்) 2. பொது மருத்துவம் (சிறிய சுவடி) 3. மருத்துவம் (பெரிய சுவடி) 4. நஞ்சுக் கடி (பாம்பு, தேள்) 5. தோத்திரம் (3 சுவடிகள்) 6. பட்டயம் (4 அணா, 8 அணா முத்திரையுடன்)

முதல் நான்கு சுவடிகள் சித்த மருத்துவத் துறையிடமும் பின்னிரண்டு சுவடிகள் புலவர் செ.இராசு அவர்களிடமும் வழங்கப்பட்டுள்ளன.

வழங்கிய திருவாளர்க்கு நன்றி.

தமிழ்ப் பல்கலைக் கழக ஆய்வு—நடைமுறைப் பணிகள்

மொழிப்புலம்

தமிழ் யாப்பியலின் தோற்றமும் வளர்ச்சியும் முதல் தொகுதி உருவாக்கம்;— தமிழில் காப்பியக் கொள்கை 2—ஆம் தொகுதி நிறைவு;— சங்க இலக்கியப் பொருட் களஞ்சியம் 3—ஆம் தொகுதிப் பணி—முதல் தொகுதியின் ஆங்கில மொழியாக்கப் பணி.

—இலக்கியத்துறை

Indian Council for Social Science Research:- Impact of Spoken Tamil on which Learning Written Tamil by the Primary School Children:- Standardisation of Linguistics Technical terms in Tamil:- Dialect Survey of Tamilnadu (Harijan Dialect) - Harijan Dialect of Thanjavur:- Festivals and Folk Deities of Tamilnadu.

—மொழியியல் துறை

பெரிய புராண ஆய்வுப் பதிப்பு;—திருமந்திர நூல், சொல்லடைவு, ஆங்கில மொழிபெயர்ப்புப் பதிப்புப் பணி.

—தத்துவத்துறை

தோடர், இருளர், கோத்தர் இசைகள், பழங்குடிகள் அமைப்புமுறை ஆய்வு.

—மலையின மக்கள் ஆய்வு மையம்

சுவடிப்புலம்

வீரன் கட்டபொம்மன் கலியுகப் பெருங்காவிய ஆய்வு:—நற்றிணைப் பதிப்பு ஆய்வு;–சுவடிகள் அட்டவணைப் பதிப்பு (முதல் தொகுதி) அச்சில்.

—ஓலைச் சுவடித்துறை

மோடி ஆவணங்கள் மராத்தி தெரிந்தவரைக் கொண்டு மொழி பெயர்ப்பு, பதிப்புப் பணி, தென்னிந்தியாவில் கல்வி வளர்ச்சி (18, 19—ஆம் நூற்றாண்டு) ஆய்வு;— பழவேற்காடு கைபீது என்ற மெக்கன்சி சுவடி ஆய்வு.

—அரிய கையெழுத்துச் சுவடித் துறை

தொண்டமான் செப்பேடுகள் பதிப்பிற்கு ஆய்வு;–கொடுமணல் அகழாய்வு|2—ஆம் பருவ அறிக்கை உருவாக்கம்.

—கல்வெட்டுத்துறை

தென்கீழைக் கடற்கரைப் பகுதிகளில் செவிவழிச் செய்திகள்; மீனவர், முத்துக் குளிப்போரிடமிருந்து கடலில் மூழ்கிய பொருள்கள், இடங்கள் பற்றிய தொகுப்பும் ஆய்வும்.

—நீரகழாய்வுத்துறை

வளர்தமிழ்ப் புலம்

சிறுபான்மை மொழி பேசுகின்ற அரசு ஊழியர்களுக்குத் தமிழ் அலுவலக மொழிச் சிறப்புப் பயிற்சிப் பணி, சென்னை உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்துடன்.

—அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை

கணிப்பொறி மூலம் மொழிகளுக்கான ஒருங்கிணைந்த வரிவடிவ மாற்றமைப்புப் பணி;— அறிவியல் தமிழ்க் கலைச் சொற்களின் கருத்தமைவு ஆய்வு

—கணிப்பு மையம்

பெரிய புராணச் சிறப்புப் பெயரகராதி, பதிப்பு நிறைவு;— மர இனப்பெயர்த் தொகுதி—தொகுதி—2 பதிப்பில்.

—தொகுப்பியல் துறை

கிராம சமூகங்களில் புதுமையாக்கம் குறித்த முயற்சிகளும் விளைவுகளும்;— தொழிலாளர்களின் தற்காலிக இடப் பெயர்வு—அரபு நாடுகளுக்குச் சென்று திரும்புவோரின் வாழ்க்கை முறைகள்;— இந்திய வாரச் சந்தைகள் (ஜப்பான் நகோயா பல்கலைக் கழகத்துடன் இணைந்து) ஆய்வும், இருமுனைவர் முதுமுனைவர் பட்ட ஆய்வும்.

—சமூகவியல் மற்றும் ஊரக வளர்ச்சித்துறை

கலைப்புலம்

முன்னிடைக்காலத் தென்னிந்தியப் படிமக்கலை (தொகுதி—2, சைவம்) ஆய்வு;— தஞ்சாவூர் மாவட்டக் கோயில் தேர்கள் ஆய்வு.

—சிற்பத்துறை

இராகங்களின் நுண் அலகுகள் (நுட்பச் சுருதிகள்) பற்றியும் தமிழகக் கோயில்களில் பண்ணிசை, கருவி இசை (கி.பி.600 — 900 பல்லவர், பாண்டியர் ஆட்சிக்காலம்) பற்றியும் கீர்த்தனை இயல் அமைதியும் இசைச்சிறப்புப் பற்றியும், ஆய்வுகள்; பஞ்ச மரபில் இசைமரபு ஆய்வு நிறைவு.

—இசைத்துறை

நாடகத்தின் அடிப்படைக் கூறுகள்;— தெருக்கூத்தில் நடிப்பு; அம்மன் வழிபாட்டுச் சடங்கில் நாடகியக் கூறுகள்;— தமிழக நாட்டுப்புற நடனங்களின் அமைப்பு;— பொம்மலாட்டம்; மறுமலர்ச்சிக்காலத் தமிழ் நாடகங்களின் போக்கு என்னும் தலைப்புகளில் ஆய்வுகள்; முதுமுனைவர் பட்ட ஆய்வுகள் 3.

—நாடகத்துறை

அறிவியற் புலம்

வெள்ளை எலிகளுக்கு நீரிழிவு நோயை உண்டாக்கி, பருத்திவிதைப் பால் மூலம் குருதிச் சர்க்கரையைக் குறைக்கும் முறை ஆய்ந்து கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

—சித்த மருத்துவத்துறை

பதினெண்கீழ்க்கணக்கு, இரட்டைக் காப்பியங்களில் தாவரங்கள்;— தமிழக மீன்கள் (இலக்கியக்கால மீன்களும் இக்கால மீன்களும்) ஆய்வுகள்.

—தொல் அறிவியல் துறை

தமிழ்நாடு, கடற்கரைப் பகுதியில் தொல் கடற்கரை விளிம்பினைக் கண்டறிதல்—(இராமேசுவரம் முதல் கன்னியா குமரி வரை) ஆய்வு.

—தொல் தொழில் துறை

கோயில் விமானங்கள் ஆய்வு

—கட்டடத்துறை

இயக்ககங்கள்

நூலகத்திற்கு வரும் தமிழ் காலமுறை இதழ்களின் எண்ணிக்கை விவரம் (03.10.'86 முடிய)

நாளிதழ்கள்—14, கிழமை இதழ்கள்—65, மாத இருமுறை இதழ்கள்—45, மாத இதழ்கள்—502, இருமாதத்திற் கொருமுறை வரும் இதழ்கள்—3, காலாண்டு இதழ்கள்—15, அரையாண்டு இதழ்—1, கூடுதல்—645.

–நூலக இயக்ககம்

New Book of Popular Science –என்னும் நூலின் தமிழ் மொழியாக்கம்; அறிவியற் செய்திகளைத் தொகுத்து வழங்கல்.

— திட்ட இயக்ககம்

புதிய வெளியீடுகள்: வெளியீட்டு எண் 61 முதல் 66 வரை 6 நூல்கள் **பதிப்பில்:** வெளியீட்டு எண் 67 முதல் 69 வரை 3 நூல்கள்; **பதிப்பாக்கத்தில்:** வெளியீட்டு எண் 70 முதல் 76 வரை 7 நூல்கள்.

- பதிப்பு இயக்ககம்

களஞ்சியம்—அகராதி

இரண்டாம் தொகுதி 'ஆ' காரச் சொற்கள் பதிப்புக்கு உருவாக்கம்.

—அறிவியற் களஞ்சியம்

3—ஆம் தொகுதி அச்சேற்றம்:— 4—ஆம் தொகுதி பதிப்பிற்கு உருவாக்கம்; 5—ஆம் தொகுதிப் பணி நிகழ்வு.

—வாழ்வியற் களஞ்சியம்

'அ' வரிசை 417 பக்கம் அச்சேறியுள்ளது. 'ஆ' வரிசைச் சொற்கள் ஏறத்தாழ 1000 பக்கங்கள் தொகுப்புப் பணி.

—பேரகராதித் துறை

தூய தனித்தமிழ் அகர முதலி—5 மடலம்;— கலைச்சொல்லாக்க அகர முதலி;— கலைச் சொல் அகர முதலி— மூன்றன் அடிப்படைத் தொகுப்புப் பணி நிகழ்கின்றன.

—தூய தமிழ்ச் சொல்லாக்க அகர முதலிகள் துறை

தமிழ்ப் பல்கலைக் கழகச்

செய்தி மலர்

திங்களிதழ்

பதிவெண் 5033/8887

இ.அ.அ. மட்டும்.

திருவாக அதிகாரி
தஞ்சை மகாராசா சரபோசி
சரசுவதி மகால் நூலகம்
தஞ்சாவூர்

தமிழ்ப் பல்கலைக் கழகம்
தஞ்சாவூர் - 613 007
தமிழ்நாடு - இந்தியா

தமிழ்ப் பல்கலைக் கழகக் களஞ்சிய வெளியீடுகள்

வெளியீட்டு எண்	வாழ்வியற் களஞ்சியம்	விலை
53—1	தொகுதி 1	300/—
53—2	தொகுதி 2	300/—
63—1	அறிவியல் களஞ்சியம் தொகுதி 1	300/—
	சங்க இலக்கியப் பொருட்களஞ்சியம்	
52—1	தொகுதி 1	250/—
52—2	தொகுதி 2	250/—

நூல்வெளியீடுகள்

வெளியீட்டு எண்		விலை
46.	மனிதனும் மரபியலும் ஞா.இராசராசேசுவரி	7—50
47.	செழியதரையன் பிரபந்தங்கள் பொதுப் பதிப்பாசிரியர் —மு.சண்முகம்பிள்ளை குறிப்புரை—ப.வெ.நாகராசன்	107—00
48.	குடற்புண்ணைக் குணப்படுத்தலாம் —சு.நரேந்திரன்	5—00
49.	மேலாளர் —ஆங்கில மூலம் கார்டன் பி.ராபி —தமிழாக்கம் இரா.சுப்பராயலு	30-00
50.	தமிழரின் ஒப்பனைக் கலைத்திறன் —வெ.வரதராசன்	55—00
54.	அறுவைச் சிகிச்சை நோய்நாடல் —லெ.சிவராமன்	120—00
56.	பத்துப்பாட்டு மூலமும் நச்சினார்க்கினியர் உரையும் —உ.வே.சா.பதிப்பின் மறுபதிப்பு	140—00
57.	தமிழர் வாழும் அண்டை நாடுகளில் தமிழ்க் கல்வி —தி.முருகரத்தனம்	57—00
58.	சீவகசிந்தாமணி உ.வே.சா.பதிப்பின் மறுபதிப்பு	265—00
61.	கடல்வாழ் ஆமைகளின் வியத்தகு வாழ்க்கை —பேரா.அ.அப்துல் ரகுமான்	15—00

புதிய வெளியீடுகள்

வெளியீட்டு எண்		விலை
60.	அகத்தியர் குழம்பு —டாக்டர் சே.பிரேமா —புலவர் ப.வெ.நாகராசன்	40—00
65.	இந்துத் திருமணச் சட்டம் —புலமை வேங்கடாசலம்	48—00
64.	பெரியபுராணச் சிறப்புப் பெயர் அகராதி— 'ஊர்ப்பெயர்கள்' —முனைவர் தா.வே.வீராசாமி	75—00
66.	பொது அறுவை மருத்துவம் —டாக்டர் சு.நரேந்திரன்	150—00

மதிப்புரைகள் சில

1) தமிழில் காப்பியக் கொள்கை

ஆசிரியர் —து. சீனிச்சாமி.

மேனாட்டு அறிஞர்களின் கருத்துக்களோடு காப்பியங்களின் இலக்கணங்களை ஆசிரியர் ஒப்பிட்டு ஆய்ந்து செல்லும் முறை சிந்தைக்கு விருந்தாகியுள்ளது. நன்றி — தினமணி 11.08.'86

2) குடற்புண்ணைக் குணப்படுத்தலாம்.

ஆசிரியர்—டாக்டர் சு.நரேந்திரன்.

பொதுமக்கள் குடற்புண்ணைப்பற்றி அறிந்து கொள்ள வேண்டியவற்றை நன்றாகவும் சுருக்கமாகவும் எளிதில் புரியும்படி ஆசிரியர் வழங்கியுள்ளார். நன்றி — தினமணி 22.09.'86

பதிப்பில்

தஞ்சை மராட்டிய மன்னர் வரலாறு
—பேரா.கே.எம்.வேங்கடராமையா

தஞ்சை மராட்டியர் கல்வெட்டுகள்
—புலவர் செ.இராசு

பாரதியார் பாடல்கள் ஆய்வுப் பதிப்பு காலமுறை அமைப்பு
—பதிப்பாசிரியர் ம.ரா.பொ.குருசாமி

தென்னிந்தியக் குலங்களும் குடிகளும்
தொகுதி 1 மூலம்: தர்ஸ்டன்
தமிழில்: பேரா. க.இரத்தினம்.

பதிப்பாசிரியர்: இயக்குநர், பதிப்புத்துறை
அச்சு: தமிழ்ப் பல்கலைக் கழக மறுதோன்றி அச்சகம், தஞ்சாவூர்—613 001.